# ஸ்ரீமரகதவல்லி அம்பிகை உடன் உறை ஸ்ரீமானிக்கேஸ்வரர் திருக்கோயில் எனப்படும் ஸ்ரீமானிக்கேச்சுரம் லிங்கப்பையன் பேட்டை [லிங்கப்ப ஐயன் பேட்டை - பொன்னேரிக்கு அருகே 6 கி.மீ]

---

மஹாபலிச் சக்ரவர்த்தியின் முன்னிலையில் யாகம் வெகு விமர்சியாக நடந்து கொண்டிருக்கும் வேளை, இந்திரன் முதலான தேவர்களுக்கும் பூலோக வாசிகளுக்கும் வயிற்றில் புளியைக் கரைத்த நிலை தான். பின்னே இருக்காதா? இதோ யாகம் பூர்த்தியானதும் மஹாபலிச் சக்ரவர்த்தி தான் சர்வ லோகங்களுக்கும் அதிபதி ஆகி விடுவாரே?

***"உலகில் உள்ள அனைத்தும் என்னுடையதாக மட்டுமே இருக்க வேண்டும், அனைத்திற்கும் நானே சொந்தம் கொண்டாட வேண்டும் "என்ற மனோ பாவம் அல்லவா இந்த மஹாபலி?***

பரம்பொருளாகிய இறைவன் இந்த விசயத்தைச் சும்மா விட்டுவிடுவாரா என்ன? அதோ அனைவரின் கூக்குரலுக்கும் உள்ளார்ந்த ப்ரார்த்தனைக்கும் செவிமடுத்த பரம்பொருள், காக்கும் தன்மையான விஷ்ணுவாக இருக்கும் அந்த மெய்ப்பொருள்; வாமன மூர்த்தியாக கஸ்யபருக்கும் அதிதி தேவிக்கும் திருவோண நாளில் மகனாக அவதரிக்கிறார்.

மஹாபலியும், சிறந்த பக்திமான், அரசன், என்ன சிறிது சுய நலம் அதிகம் கொண்டவன். பக்தனை உரிய முறையில் திருத்தவே இறைவன் லீலைகள் புரிவது வழக்கம். இதோ வாமன மூர்த்தி யாகத்துள் சென்று மஹாபலியிடம் மூன்று அடி மண் யாசகம் வேண்டிப் பெறுகிறார். திருவிக்ரமாவதாரம் செய்து அவனை பாதாள லோகத்துக்கு அனுப்பி அனைவரையும் காக்கிறார்.

**<u>யாகத்துக்குச் செல்லும் முன் வாமனன் செய்த சிவ பூஜை:</u>**
யாக சாலைக்குள் சென்று தன் உயர்ந்த அறிவால் மஹாபலியை ஆட்கொள்ள மிக்க விழிப்புணர்வு தேவை என்று தன் தந்தை மூலம் உணர்ந்த வாமனர், தந்தை மூலமே சிவ தீட்சை பெற்று, அற்புதமான ஒளிப்பிழம்மான அழகிய சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கிறார். அவர் தான் ஸ்ரீமானிக்கேஸ்வரர். தமிழில் மானி என்றான் வாமனன் என்று அர்த்தம்.

மானியாக வந்த மஹாவிஷ்ணு பூஜித்த மானிக்கேஸ்வரர் ஜோதிப் பிழம்பாய் காட்சிதரும் ஸ்தலம் தான் தொண்டை நாட்டில் பொன்னேரிக்கு அருகில் உள்ள லிங்கப்பையன் பேட்டை. மிகப்பெரிய சிவலிங்கமாக இறைவன் இருக்கிறார். சாட் சாத் மதுரை சொக்கநாதரின் ப்ரதிபலிப்பிலேயே ஐயன் காட்சி தருகிறார். அக்னி போல் மிளிர்கிறார்.

வாமன மூர்த்தி தன் திரிவிக்ரமாவதாரச் சிறப்பை இந்த ஈசன் மூலம் பெற்று விடுகிறார். யாகத்தில் மஹாபலியிடம் மூன்று அடி யாசகம் கேட்கிறார். அதைத் தராமல் தடுத்த அசுரகுல குரு சுக்ராச்சாரியார் தீர்த்த கமண்டலத்தின் வாயினுள் வண்டாகச் சென்று தீர்த்தம் வார்த்து தானம் செய்வதைத் தடுக்கிறார்,அப்போது வாமன மூர்த்தி தன் தர்பைப்புல்லால் வண்டின் கண்களைக் குத்தி வதைக்கிறார். இந்த பாவம் தீரவும் பின்னர் வாமனர் இவ்வீசனை பூஜிக்கிறார்.

தன் தவற்றை உணர்ந்த சுக்ராச்சாரியாரும் "இனி மேல் யார் யாருக்கு தானம் செய்வதையும் தடுக்கக் கூடாது" என்ற நல்புத்தி வேண்டி இவ்வீசனை வணங்கி மன்னிப்பு கேட்கிறார்.

தேவர்கள் வௌவால்களாக இருந்து பூஜிக்கும் ஸ்தலமும் இதுவாகும். சூரியன் ஈசனைத் தன் கதிர்வீச்சுக்களால் தீண்டிப் பூஜிக்கிறார்.

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட ஸ்தலம் ஸ்ரீமானிக்கேச்சுரம் ஆகும்.

__ஸ்ரீசுக்ர தீர்த்தம்:__

கோயிலுக்கு எதிரே ஸ்ரீசுக்ர தீர்த்தம் உள்ளது.சுக்ராச்சாரியார் மன்னிப்புப் பரிகாரம் கோரி ஏற்படுத்திய தீர்த்தம் இது. சுக்ர க்ரஹத்தின் நற்பலன்கள் இதன் மூலம் கிடைக்கும். தான தர்ம காரியங்களைத் தடுத்த பாவம் போக்கும் சக்தி கொண்டது இத்தீர்த்தம். பாவ காரியத்தை மீண்டும் செய்யாத அறிவையும் மனதையும் தர வல்லது.

__அன்னையின் எழில் கோலம்:__

அம்பிகை ஸ்ரீமரகதவல்லி என்ற திருநாமத்துடன் அபய வரதம் தாங்கி பாசம் அங்குசம் ஏந்தி அருள்பாலிக்கிறாள். மரகதவல்லி அன்னை புதன் க்ரஹத்தின் இயக்கத்தை அருள்வதால், கல்வி-கேள்விகளில் சிறக்க வேண்டி இத்தலத்தில் அன்னைக்கு வழிபாடுகள் செய்யலாம்.

__கல் மண்டபம் கேட்ட காரிகை:__

மேலும் திருவாலங்காட்டில் வாழ்ந்த ஒரு சிவாச்சாரியார் தன் சிஷ்யர் ஒருவரின் மகனுக்குக் கல்யாணம் தள்ளிக் கொண்டே போவதை எண்ணி, இத்தலத்தில் பூஜைகள் செய்ய வழிகாட்டியுள்ளார். அவரும் அதன் படி செய்ய விரைவில் கல்யாணம் ஆகிறது. அதற்குக் காணிக்கையாக அவர் மிக அழகிய கல் வேலைப்பாடுகள் கொண்ட மஹாமண்டபத்தை அம்பிக்கைக்கு அர்ப்பணித்துள்ளார்.இதைக் குறித்த கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளது.

__காலபைரவம் பஜே!__

காசிக்கு நிகரான சக்தி கொண்ட ஸ்ரீகால பைரவ மூர்த்தி இத்தலத்தின் மிக முக்கிய விசேஷம் ஆவார். பைரவரின் கம்பீரமும் அழகும் பார்க்கக் கொள்ளை போகின்றன. தேய் பிறை அஷ்டமியில் உப்பிடாத தயிர் அன்னமும் உப்பிடாத மிளகு வடையும் இவரும் ஆதிகாலம் முதல் படைக்கப் படுகின்றன. எட்டு திசைகளில் இருந்தும் நாம் செய்யும் காரியத்துக்குத் தடை ஏற்படுத்தும் அனைத்து தீய சக்திகளையும் பைரவர் நாசம் செய்கிறார்.இது பல அன்பரின் அனுபவமும் ஆகும்.

நாம் செய்யும் நல்ல காரியங்களை, சுயநலத்துடன் தடுக்க எண்ணும் தீய சக்திகளை பைரவர் அழிக்கிறார்.

சொத்துத் தகராறு, பாகம் பிரிப்பதில் அநீதி என முக்கிய ப்ரச்சனைகளை மானிக்கேஸ்வரர் தடுக்கிறார்.

முன் ஜென்மத்திலும் இப்பிறவியிலும் பிறர் செய்யும் நல்ல தான தர்ம காரியங்களைத் தடுத்த மஹாபாவத்தை ஈசன் போக்கி மீண்டும் அத்தவற்றைச் செய்யாமல் இருக்கும் அறிவைத் தருகிறார்.

எப்பேர்ப்பட்ட கல்யாணத் தடையையும் அன்னை ஸ்ரீமரகதவல்லி போக்குகிறாள்.

புதன் மற்றும் சுக்ர க்ரஹங்களின் அருளையும் இத்தலத்தில் பெறலாம்.

**அருட்பெருஞ்சோதி அலைந்து திரிந்து அமர்ந்த இடம்:**

அருட்பெருஞ்சோதி வள்ளல் பெருமான் அவதரித்த அவர் தாயாரின் சொந்த ஊர் மிக அருகில் இருக்கும் சின்னக்காவனம் ஆகும். அம்மஹான் இறைவனை உணரும் ஆன்மீகப் பயிற்சிகள் செய்த காலத்தில் இப்பகுதிகளில் அலைந்து திரிந்து இக்கோயிலில் இளைப்பாறி இருக்கும் சான்றுகள் உள்ளன.

மேலும் ஸ்ரீமத் பாம்பன் குருதாச ஸ்வாமிகள் பொன்னேரி, ஆண்டார்குப்பம், சின்னாக்காவனம் ஆகிய ஸ்தலங்களுக்கு யாத்திரை வந்த போது இத்தலத்து ஈசனையும் கண்டார்.

மஹான்கள் இருவர் மிதித்த புண்ணிய ஸ்தலம் நம் பாவம் போக்கும், வினை தீர்க்கும்.

எனவே ஸ்ரீமானிக்கேச்சுரம் வருவீர், அருள் பெறுவீர்! திருப்பணி செய்வீர்!

ஓம் நம சிவாய!